# தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்குவதே கழகத்தின் கொள்கை!

தமிழ்நாட்டின் இயக்கம் கலைஞர் என்ற அருமையான தலைப்பு திரைப்பட இயக்குநர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தலைப்புக்கு ஒற்றை வரியில் பதில் சொல்லி விட முடியுமா? எதனால் தமிழ்நாட்டின் இயக்கம் கலைஞர் தான் என்று சொல்லுகிறோம் என்பதனை மற்றவர்கள் சிந்தித்துப் பார்த்து சரி என்று ஒப்புக்கொள்கின்ற விதத்திலே நாம் விளக்கிச் சொல்ல வேண்டும் அல்லவா? நான் என்னில் இருந்தே இந்த தலைப்பை நியாயப்படுத்த ஆரம்பிக்கிறேன்.

கலைஞருடைய திரைமொழி என ஒன்று இருந்தது. அது காலத்தால் அழிக்க முடியாதது. அந்தத் திரை மொழியை நான் கற்றுக் கொண்டதனால் மட்டும்தான் இன்று வரை படங்களை எழுதிக் கொண்டிருக்க முடிகிறது. அவருடைய ஆற்றல் மிக்க கருத்துகள் நிரம்பிய சமுதாய சீர்திருத்த கொள்கைகளைக் கொண்ட ஆழமான வசனங்களை நான் கற்றுக் கொண்டேன். திருப்பித் திருப்பி பேசிப் பழகினேன். அவர் கதைகளை அணுகுகின்ற விதம் அன்றைய காலகட்டத்தில் மிகவும் புதுமையாக இருந்தது. ஒரு திரைக் கதையை எப்படிச் சொன்னால் சிறப்பாக இருக்கும் என்பதனை அவர் திரையிலேயே செய்து காட்டியதை நான் அணுவணுவாக படித்தேன். அதனைக் கற்றுக் கொண்டேன்.

அதன் காரணமாகத்தான் 50 ஆண்டுகளுக்கு மேலாக 300 படங்களைத் தாண்டி இன்னமும் திரையுலகில் எழுதிக் கொண்டிருக்கிறேன். அதன் காரணமாகத்தான் இங்கே உங்களால் அழைக்கப்பட்டு உங்கள் முன்னால் பேசுகின்ற வாய்ப்பினை கலைஞரின் நூற்றாண்டு விழாவிலே பெற்றிருக்கின்றேன். எனவே முதலில் உங்களுக்கு என் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்ததாக திரையுலகில் எனக்கு வாய்த்த முதல் நண்பர். இன்று வரை நண்பராகவும் நல்ல வழிகாட்டியாகவும் விளங்குகின்ற எஸ்.பி. முத்துராமன் அவர்கள் தலைமையில் பேசுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அடுத்தது நம்முடைய கவிஞர் முனைவர் சொற்கோ. அவர் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நீங்கள் குறைந்தபட்சம் 25 நிமிடங்கள் ஆவது பேச வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்! அதனை நான் என்னை பெருமைப்படுத்துவதாக நினைத்துக் கொண்டால் நிச்சயமாக முட்டாள் ஆகி விடுவேன். அவர் எந்த அர்த்தத்தில் சொன்னார் என்பதை நான் தெளிவாக உங்களுக்குச் சொல்லி விடுகிறேன்.' எப்போதும் போல் ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் காரசாரமாக கத்தி விட்டு போய் விடாதீர்கள். எதையாவது கருத்துக்களை படித்துவிட்டாவது வந்து எமது தொண்டர்களிடம் சொல்லுங்கள் என்பதுதான் அவருடைய வேண்டுகோளுக்கான அர்த்தம் என்பதை நான் நன்றாக அறிவேன்!

தமிழ்நாட்டின் இயக்கம் டாக்டர் கலைஞர் என்பதை நாம் சொல்ல வேண்டுமானால் அதற்கான காரண காரியங்களை நான் விளக்கி ஆக வேண்டும்! ஷேக்ஸ்பியர். நல்ல நாடகங்களை எழுதியவர். அவர் பல்கலைக்கழகங்களில் படித்தவர் அல்ல ! ஆனால் அவரது நாடகங்கள் பல்கலைக்கழகங்களுக்கு பாடமாக விளங்கின! லாட் பைரன் அருமையான கவிதைகளை எழுதினார். அதனால் உலகப் புகழ்பெற்றார்!

ஆபிரகாம் லிங்கன் தாழ்வுற்ற சமுதாயத்திலிருந்து உச்சத்தை தொட்ட பெரியவர். உலகம் அவரை போற்றுகிறது! வின்சென்ட் சர்ச்சில், லண்டன் மாநகரின் பிரதமர். பெருமை வாய்ந்த அரசியல்வாதியாக கருதப்பட்டவர். சேகுவாரா, புரட்சி என் மூலம் தன் நாட்டு மக்களை வளர்த்தெடுத்தவர். ஓ ஹென்றி தான் எழுதிய சிறுகதைகளால் உலகப் புகழ் பெற்றவர். ஜவஹர்லால் நேரு, இவரது நிர்வாகம் உலகத்தவர்களால் மிகவும் மதிக்கப்பட்டது. லெனின் சோஷலிசத்தின் தந்தை. சாக்ரடீஸ். ஏதென்சு நகரத்தின் இளைஞர்களை தட்டி எழுப்பி தத்துவ சித்தாந்தத்தை சொன்னவர்! மா சே துங் மாபெரும் நடை பயணத்தால் உலகப் புகழ்பெற்றவர்! மார்ட்டின் லூதர் கிங்,. கருப்பர்களின் இனத்திற்காக பாடுபட்டு உலகத்தின் சிறந்த ஜனநாயக வாதியாக, நல்ல தலைவராக விளங்கியவர்! நமது பெரியார் பகுத்தறிவுக்கு . நமது பேரறிஞர் அண்ணா, தோழமைத் தொடர்புக்கு! இப்படி பல பேர் உலகிலே ஒவ்வொரு துறையில் சிறந்து விளங்கி உலகப் புகழ்பெற்றிருக்கிறார்கள்.

இவை அனைத்தும் மட்டுமல்ல இன்னும் ஏராளமான திறமைகளை உள்ளடக்கிய ஒற்றை மனிதர் நமது முத்தமிழறிஞர் வளரையர் கலைஞர்! அவர் ஒரு கதாசிரியராக, மிகச் சிறந்த வசனகர்த்தாவாக, நல்ல பாடல்கள் எழுதிய சிறந்த கவிஞராக, தலை சிறந்த தலைவராக, மிகச்சீரிய தொண்டனாக, முதல்வராக, எதிர்க்கட்சித் தலைவராக, ஒரு நடிகனாக, நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள் நான் அவரது காகித பூ, தூக்கு மேடை, நாடகங்களைப் பார்த்து மகிழ்ந்திருக்கிறேன், இத்தோடு நிறுத்தி இருக்கிறாரா? இந்தியாவின் அரசியல் மொழி என்றால் அது முத்தமிழ் அறிஞர் கலைஞர் பேசுகின்ற மொழிதான்! இத்தனை திறமைகள் கொண்ட ஒருவர் தமிழ்நாட்டின் இயக்கம் என்று சொல்லுவதில் என்ன தவறு இருக்கிறது? ஆனால் நான் கேட்கிறேன். மனசாட்சிக்கு பயந்து உண்மையைச் சொல்லுங்கள் தமிழர்களே! நீங்கள் அவருக்கு இருக்கும் திறமை அளவுக்கு அவரைப் பாராட்டினீர்களா? இல்லை, அதுதான் என் வருத்தம்! என்ன காரணம்? ஏன் பாராட்டவில்லை? பக்கத்திலே ஒரு தமிழன் அதி திறமைசாலியாக இருந்துவிட்டால் உங்களுக்குக் காது கேட்காது.

கண் பார்க்காது! தமிழர்களே நீங்கள் நண்டு ஜாதி. ஒரு நண்டு ஏதோ திறமைகளை வளர்த்துக் கொண்டு சிரமப்பட்டு ஒரு சுவற்றிலே ஏறிவிட்டுத் தப்பிக்க முயற்சி பண்ணினால் பின்னால் போகின்ற இன்னொரு நண்டு முன்னால் போகின்ற நண்டின் காலைப் பிடித்துக் கீழே இழுத்து தள்ளி விடும். நண்டு ஜாதி நமது தமிழ் ஜாதி! சொல்வதற்கு வெட்கப்படுகிறேன் வேதனைப்படுகிறேன், அதுதான் உண்மை! இத்தனை திறமைகள் வாய்ந்த நமது கலைஞர் மட்டும் வெளிநாட்டில் பிறந்திருந்தால், நான் மேலே சொன்னேனே அத்தனை அறிஞர்களும், அவர்களை எல்லாம் விட அதிகமாகப் பாராட்டப்பட்டு இருப்பார், இன்னும் சொல்ல வேண்டுமானால் நமது கலைஞரை பாரெங்கும் உலகத்தின் எட்டாவது அதிசயம் என்று கொண்டாடியிருப்பார்கள்! உண்டா இல்லையா சொல்லுங்கள்?

இன்னொரு விஷயத்தை கேட்கிறேன் பதில் சொல்லுங்கள்! சில நாட்கள் முன்பாக தமிழ்நாட்டிலிருந்து ஒரு இளைஞனின் குரல் எழுந்தது, அந்தக் குரலைக் கேட்டு அகில இந்தியாவே நடுங்கியது. நான் யாரைச் சொல்லுகிறேன் என்று உங்களுக்குத் தெரியும்! அந்தக் குரல் யாருக்கு சொந்தம்? ‘வீரம் நிறைந்த அந்தக் குரலுக்குச் சொந்தக்காரர் கலைஞரின் பேரன் அல்லவா? மொழி காப்பதற்காக தண்டவாளத்தின் முன்னால் ஓடி வருகின்ற ரயிலின் முன் தலை வைத்த தலைவரின் பேரன் அல்லவா? அந்த ரத்தம் எங்கே போகும், அந்த ரத்தம் இப்படிப் பேசவில்லை என்றால் தான் நாம் வருத்தப்பட வேண்டும்! புதுச்சேரியில் ஒரு கூட்டம் பேசிவிட்டு கலைஞர் வருகிறார்! எதிரிகள் இவரைப் பிடித்து அடித்து துவைத்து இவர் இறந்துவிட்டார் என்று வீதியிலே தூக்கி போட்டு விட்டு போய் விடுகிறார்கள்! யாரை. கலைஞரை! அந்தக் கலைஞரின் பேரன் வேறு விதமாக பேசியிருந்தால் தான் நான் வியந்திருப்பேன். இப்படித்தான் கலைஞரின் பேரன் பேச வேண்டும் பேசி இருக்கிறார் அதனை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்! அதனால் தான் நான் இயக்கம் கலைஞர் என்று அடித்துச் சொல்கிறேன்! இதில் ஆன்மிகவாதிகளுக்கு எதற்காக கோபம்? அவர்கள் ஏன் ஒட்டுமொத்தமாக எதிர் குரல் எழுப்புகிறார்கள். பயம், தமிழ்நாட்டின் இன்னொரு இயக்கமாக பேரனும் தயாராகி விட்டால் இன்னும் 50 வருடங்களுக்கு கழகங்களை ஆட்டச் அசைக்கவோ முடியாது! சற்று சிந்தித்துப் பாருங்கள் தமிழர்களே! அந்த இளைஞர் அப்படி என்ன தவறாகச் சொல்லிவிட்டார்? கழகத்தின் கொள்கையைத் தானே சொன்னார்! பார்ப்பனியம் அற்ற, சமநீதி, சமதர்மம், கொண்ட ஒரு தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்குவது தானே கழகத்தின் கொள்கை! ,

காஷ்மீரில் இருந்து கன்னியாகுமரி வரை அத்தனை ஆன்மிகவாதிகளும், அதிகமான மடாதிபதிகளும் கலைஞர் பேரனின் சனாதன எதிர்ப்புக்கு எதிர்க்குரல் எழுப்புகிறார்களே அது எதற்காக? சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? மைனாரிட்டி இனம் தங்கள் பதவிகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஒன்றாக குரல் கொடுக்கிறார்கள். மதத்தைக் கேடயமாகப் பயன்படுத்துகிறார்கள்!இதனை ஒட்டுமொத்த தமிழர்களும் ஒட்டுமொத்த தமிழினத் தலைவர்களும் ஒரே குரலில் ஏன் அந்த இளைஞனுக்கு ஆதரவு குரல் எழுப்பவில்லை என்பது எனது கேள்வி பயமா? அப்படி பயந்து பயந்து வாழ்வது ஒரு வாழ்க்கையா? தற்போது இந்திய மக்களே சிந்தித்துப் பார்க்க வேண்டிய கட்டம் வந்திருக்கிறது. அந்த இளைஞன் என்ன தவறாக சொன்னார்? திராவிட அரசியல் என்பது என்ன? பார்ப்பனியம் நீங்கலாக சமநீதி, சமதர்மம், எல்லோருக்கும் எல்லாம், சமத்துவம் என்ற உரிமைகளை கொடுப்பது தானே திராவிடத்தின் கொள்கை! அப்படி என்றால் சனாதன எதிர்ப்பு அதற்குள் அடக்கம் அல்லவா? சனாதன தர்ம எதிர்ப்பைச் சொல்லி வளர்ந்தது தானே கழகம். இதனை மறுக்க முடியுமா?; நமது முதல்வர் சொல்லும் திராவிட அரசியல் இது தானே? இந்தக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு வாக்களித்ததனால் தானே கழகம் என்று ஆட்சியிலே இருக்கிறது?

இது புரியாதா ஒன்றிய அரசுக்கு! நான் சொல்ல வருவது என்னவென்றால் ஆன்மிகம் கோவில்களில் இருக்கட்டும். கோட்டைக்காடு வரவேண்டாம். கோட்டையிலே அரசியல் நடக்கட்டும். அதிலே மைனாரிட்டி இனம் அரசியலை கலக்க வேண்டாம்! இதில் கோபப்படுவதற்கு என்ன இருக்கிறது? தமிழர்களை மதஎதிர்ப்பு வெறியர்களாக சித்தரிக்க முயல்வது எதற்காக?

இதனைச் சிந்தித்ததனால் தான் அந்த இளைஞர் சனாதன ஒழிப்பு மாநாட்டில் தங்கள் கட்சியின் கொள்கையை பேசியிருக்கிறார்! கோபப்பட என்ன இருக்கிறது! தமிழகத்தில் நடப்பது சனாதன தர்ம ஆட்சி அல்லவே! இங்கே நடப்பது திராவிட மாடல் ஆட்சி! ஆகவே அவர் பேசியதில் எந்த தவறும் இல்லை! ஆனால் இதைக் கேட்ட ஒரு மடாதிபதி அந்த அமைச்சரின் தலைக்கு விலைவைக்கிறார்!தலையை சீவி வந்தால் பல கோடிகள் கொடுப்பதாக சொல்கிறார்? கொலை செய்யத் தூண்டுகின்ற இந்த பேச்சை ஒன்றிய அரசு ஒப்புக் கொள்கிறதா?ஒருவேளை அவர்கள் ஒப்புக் கொள்வதாக இருந்தால் தலையை சீவி எடுத்துக்கொண்டு தமிழ்நாட்டில் எல்லையை தாண்டி போனால் தானே சொல்லப்பட்ட கோடிகள் கிடைக்கும்! எடுத்துப் போய் விடுவீர்களா? எங்கள் கைகள் என்ன பூப்பறித்துக் கொண்டா இருக்கும்?

நடந்த ஒரு விஷயத்தைச் சொல்கிறேன், என்னுடைய ஒரு படத்துக்காக மானியம் வாங்க நான் முதல்வராக இருந்த கலைஞர் அவர்களைச் சந்தித்தபோது நான் எழுதிய தமிழா விழி எழு என்ற நூலினை அவர் கையிலே கொடுத்தேன். அதன் தலைப்பைப் பார்த்தவுடன் அவர் சொன்னார் !

தம்பி குகா, இந்த தமிழன் எப்போதுதான் விழிக்கப் போகிறான், எப்போதுதான் எழப்போகிறான்,

நான் இன்னும் எத்தனை வருடங்கள் தான் இதற்காக உழைக்கப் போகிறேன்! அவர் சொன்ன அந்த வார்த்தைகள் என் உள்ளுணர்வை தூண்டியது, அன்று தான் நான் முடிவெடுத்தேன். இனிமேல் நான் இவர் பின்னால் தான் நிற்க வேண்டும் என்று! அதனால் தான் நண்பர்களே, அன்றிலிருந்து இன்றுவரை நான் முரசொலியில் எழுதிக் கொண்டிருக்கிறேன். என்னுடைய கைகள் நடுங்கும் வரை, என்னுடைய எண்ணங்கள் புதிய கருத்துகளைக் கக்கும் வரை நான் முரசொலியில் எழுதிக் கொண்டு தான் இருப்பேன்! .

கலைஞர் அவர்கள் விட்டுச் சென்று இருக்கிற பணி சாதாரண பணி அல்ல! அதனை அல்லும் பகலும் சளைக்காமல் ஒற்றை மனிதனாக தூக்கிச் சுமக்கும் தம்பி ஸ்டாலின் அவர்கள் பின்னால் தமிழர்கள் இன்னும் அதிகமாக அணி திரள வேண்டும். தொண்டர்களையும் கட்சிக்காரர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து உங்களுக்குள்ளே நீங்கள் பேசிக் கொண்டு இருக்காதீர்கள். எதிர் கருத்து உள்ளவர்களைச் சந்தியுங்கள். அவர்களுக்கு விளக்கிச் சொல்லுங்கள். இன்றைய நிலையில் தமிழ்நாட்டைக் காப்பாற்றக்கூடிய ஒரே தலைவர் ஸ்டாலின் அவர்கள் தான். மக்களை சந்தியுங்கள், அண்ணா சொன்னது போல் அவர்களோடு பழகி நாட்டின் நடப்பை எடுத்துச் சொல்லுங்கள். நாங்கள் ஆன்மீக விரோதிகள் அல்ல. ஆன்மீகம் கோவில்களில் இருக்கட்டும். ஆட்சி கோட்டையிலே நடக்கட்டும். இந்தியாவைக் காப்பாற்ற திராவிட அரசியல் தான் இன்று தேவை. பிரிந்து போனவர்கள் எதற்காக பிரிந்து போனார்கள் என்பதை சிந்திக்க வேண்டும். போன இடத்தில் இப்போது எல்லாமே சரியாய் இருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எதுவுமே சரி இல்லை என்பதை உணர்ந்து கொண்டு திரும்பி வரவேண்டும். இதனைத் தொண்டர்கள் செய்ய வேண்டும். அப்போது தான் தமிழ்நாட்டையும் இந்தியாவையும் காப்பாற்ற முடியும். பிரிந்து சென்றவர்கள் எதற்காக சென்றார்கள் என்பதனை உணர்ந்து கொண்டால், போதும். அவர்களாகவே திரும்பி வந்து விடுவார்கள். ஏனென்றால் இதுதான் தாய்க் கழகம். பிரிந்து சென்றவர்களிடம் ஒரு கேள்வி எதற்காக பிரிந்து சென்றார்கள்? கலைஞர் தவறு செய்தார் என்றா? இல்லை, அந்த உண்மையை நான் அறிவேன். இதோ எங்கள் முன்னால் அமர்ந்திருக்கிறாரே அம்மையார் அவரின் தந்தை தங்க பாண்டியன், எஸ் எஸ் தென்னரசு .இவர்களும் நன்கு அறிவார்கள். ஆகவே அனைவரும் இந்தியாவை காக்க ஓரணியில் திரளுங்கள்.

இறுதியாகவும் உறுதியாகவும் சொல்லுகிறேன்,. வெறும் திரைப்பட இயக்குனர்கள் தானே என்று எங்களை எண்ணி விடாதீர்கள். தமிழ்நாட்டின் இயக்கமான முத்தமிழறிஞர் கலைஞரின் சீரிய பணியினை கலை உலகிலும் பார்த்து வளர்ந்தவர்கள் நாங்கள். அவரிடம் கற்றுத் தேர்ந்தவர்கள் நாங்கள்! எங்கள் நாடி நரம்பிலும் தமிழ், தமிழ்நாடு என்ற எண்ணங்கள் இழைந்தோடுகின்றன. அரசியலில் நேரடியாக தொடர்பு இல்லாதவர்களாக இருந்தாலும்

எங்கள் நாட்டை பாதுகாக்கின்ற அமைச்சர்...கலைஞர் அவர்களின் பேரன் தலைக்கு விலை வைத்தால் நாங்கள் உங்களுக்கு எத்தனை தலைகள் வேண்டுமானாலும் தரத் தயாராக இருக்கிறோம், ஆனால் கலைஞரின் பேரன் நிழலைக்கூட தீண்டி விட நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். சாந்த குணம் உடையவர்கள் நாங்கள் ஆனால் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு. இதற்கு மேல் இதைப் பற்றி நான் பேச விரும்பவில்லை, தமிழ்நாட்டின் இயக்கம் கலைஞர் தான்.



**வி.சி.குகநாதன்**
திரைப்பட இயக்குனர்



மயிலாடுதுறை மாவட்டம் தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரி கலையரங்கில் சாலைப் பாதுகாப்பு குறித்த ஆய்வுக் கூட்டம் பொதுப்பணிகள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது. உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப்யாதவ், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பன்னீர்செல்வம், எஸ்.ராஜ்குமார், மாவட்ட ஊராட்சித் தலைவர் உமாமகேஸ்வரிசங்கர் மற்றும் பலர் உள்ளனர்.

### கழக இளைஞரணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வருகை

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பிரம்மாண்ட வரவேற்பு; அலைகடலெனத் திரண்டு வாரீர்!

### கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை.

கிருஷ்ணகிரி, செப். 23-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சரும்,

இளைஞர்களின் எழுச்சி நாயகனுமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அமைச்சராகப் பொறுப்பேற்று முதல் முறையாக வருகிற 25 ஆம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெறும் அனைத்துத் துறை அதிகாரிகளுக்கான ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்கிறார்.



இதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக பெங்களூரு சாலையில் மாவட்ட தி.மு.க. அலுவலகம் அருகில் அமைக்கப்பட்டுள்ள படிப்பகத்தை திறந்து வைக்கிறார்.

இதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த 20 அணிகளின் சார்பாக பிரம்மாண்டமான வரவேற்பளித்து வழிநெடுகிலும் தி.மு.க. கொடி ஏந்தி, தாரை, தப்பட்டை முழுங்க ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுகிறார்.

தொடர்ந்து கிருஷ்ணகிரி ஸ்ரீ தேவராஜ் மஹாலில் நடைபெற உள்ள கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கிழக்கு மாவடத்தில் உள்ள கழக மூத்த முன்னோடிகள் 1800 பேருக்கு தனது திருக்கரங்களால் பொற்கிழி வழங்கி சிறப்பிக்க உள்ளார்.

இதனை தொடர்ந்து ஸ்ரீ தேவராஜ் மஹால் வளாகத்தில் நடைபெறும் ஒருங்கிணைந்த கிருஷ்ணகிரி மாவட்ட இளைஞர் அணி பாசறைக் கூட்டத்தில் கலந்து கொண்டு எழுச்சி உரையாற்ற உள்ளார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், மாவட்ட ஊராட்சி குழு, ஒன்றிய குழு, நகராட்சி, பேரூராட்சித் தலைவர், துணைத் தலைவர், கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர், துணைத் தலைவர், மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மகளிர் அணியினர்,

BLA 2, பூத் கமிட்டி, கிளைக் கழக செயலாளர், திராவிட முன்னேற்ற கழக தொண்டர்கள், பொதுமக்கள் அனைவரும் இந்த அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு, பிரமாண்ட வரவேற்பு அளித்து அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் சிறப்புரை!

## நாகை மாவட்ட விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி கலந்துரையாடல் கூட்டம்!

### எஸ்.பால்ராஜ், ஆர்.துரைராஜ் பங்கேற்பு!

நாகை, செப்.23-

நாகை மாவட்ட தி.மு.க. விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடை பெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் எஸ்.பால்ராஜ், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர். துரைராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி தலைவர் வே.கோவிந்தராசு வரவேற்றார். கூட்டத்திற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் தலைமை தாங்கி வருங்காலத்தில் விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணியின் பணிகள் குறித்து பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட விவசாய அணி மாவட்ட தலைவர் சின்னக்குமார், துணை அமைப்பாளர்கள் எம்.எஸ்.அன்புவேலன், சோழநம்பி, காத்திகேயன், எஸ்.மூர்த்தி, கா.குமார், கா. அழகிரிபாலன், வீ.சோழன், கோ.ஜீவானந்தம், எஸ். விவேகானந்தன், கு.விரராகவன், விவசாயத் தொழிலாளர் அணி துணைத்தலைவர் கோ.சிவக்குமார், துணை அமைப்பாளர்கள் ஏ.பாலசுப்பரமணியன், டி.இராஜேந்திரன், வி.எஸ்.பாரமசிவம், கி.பாபு, க.இளஞ்செழியன், கே. செந்தில்குமார், லோகநாதன், எ1.வெங்கடாசலம், எல்.அம்பிகாபதி, எஸ். மோகன் ஆகியோர் கலந்து கொண்ட னர்.


கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள்:

மாவட்ட சார்பு அணிகளான விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணிக்கு மாவட்டத் தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்களை நியமனம் செய்த கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், கழக பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன், அணிச் செயலாளர்கள், ஏ.கே.எஸ். விஜயன், அன்னி யூர்சிவா, மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் ஆகியோருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும்,

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு விவசாய கண்காட்சியை கலைஞர் பிறந்த திருக்குவளையில் நடத்திடுவது என்றும், மஞ்சள் பை விழிப்புணர்வு ஏற்படுத்துவது, விதைப் பந்து சேகரித்தல் போன்ற பணிகளை செய்வது என்றும், தலைமைக் கழகம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அணிக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை எவ்வித குறைபாடும் இன்றி முழுமையாக சிறப்பாக ஒற்றுமையாக இருந்து மாவட்டக் கழகச் செயலாளர் ஆலோசனைப் படி, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் ஆலோசனைப்படி சிறப்பாக செய்திடுவது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோபி ஜி. வெங்கிடு
### செப்டம்பர் 23 (2020)



பள்ளிப் பருவத்திலேயே திராவிடர் கழக கொள்கையில் ஈர்க்கப்பட்டு பணியாற்றி வந்த இவர், கழகம் துவங்கிய காலத்திலேயே உறுப்பினர். தீவிர சுயமரியாதைக்காரர்.

வட்டச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – மாவட்ட இலக்கிய அணி தலைவர் – மாநில விவசாய அணி இணைச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்ததோடு, தலைமைக் கழக பேச்சாளராக தமிழகம் முழுவதும் கழகக் கொள்கைகளை பரப்பியவர்.

கோபி நகர் மன்ற உறுப்பினராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியதோடு, 1996ஆம் ஆண்டு கோபி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

1952–ல் தார்ச்சட்டி ஏந்தி இந்தியை அழித்த போராட்டத்தில் துவங்கி, 1964 இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தில் ஒரு மாதம் சிறைவாசம் அனுபவித்தவர்.

“பொதுமக்களின் சேவகராகத் திகழ்ந்த – கழகத்தின் முன்னணிச் செயல்வீரர்களில் ஒருவரான ஜி.பி.வெங்கிடு அவர்களின் மறைவு கழகத்திற்குப் பேரிழப்பாகும். ” என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**